Registered No. M. 594

சத்யம்வத,
தர்மஞ்சர.

தத்வம் எங்குண்டு,
தத்வன் அங்குண்டு.
(திருமந்திரம்.)

பிரம்மஞ்ஞானம் ௐ பத்திரிகை

வாலம் II. { 1907-ஷு நவம்பர் மீ
பிலவங்கஷு கார்த்திகை மீ } நம்பர். 5.

அடக்கம்.

1. பகவத்கீதை ஏ. சிவராவ் பி. ஏ.
(தொடர்ச்சி) (சப்ரிஜிஸ்தரார் சைதாப்பேட்டை) 55—58
2. பரப்பிரமும். அதன் வியக்தாவஸ்தைகளும். 65—72
3. ஸ்ரீ வெங்கடேசுவர தீட்சதர் (என்கிற)
அய்யாவாள் பத்திராதிபர் ... 73—77
4. ஆர்யர்களின் தர்மம்.
(தொடர்ச்சி) பத்திராதிபர். ... 78—79
5. (a) பிரச்னோத்திரங்கள் பத்திராதிபர் ... 80—82
(b) சு. சரவணமுத்துப் பிள்ளையவர்கள் சொல்லிய
(ஆசிரியவிருத்தம்) 83
(c) சமாசாரக்குறிப்புகள் ... ... 83—85
(d) பிரசுரங்கள்.

Printed at the "S[illegible] Vinodini Press," Tanjore
Edited and Published by A. Ramier at Tiruvalur.

Copy-Right Registered.

வருடசந்தாமிகவும் சோற்பம்! தபாற்கூலியுள்பட ரூ 1-8 தான்.

The Siddant a Deepika or the Light of **Truth, Madras.**

The only magazine devoted to the study "Siva Siddanta Philosophy

Annual subscription Rs. 4. The journal has a very wide circulation throughout India. Burmah, The Straits, Ceylon and the European Countries.

Wanted active Agents and liberal Commission. Saiva Siddanta Philo ophy is the choicest product of the Dravidian Intellect.

ஆத்மபோதினி.

இப்பெயர் புனைந்த ஓர் பத்திரிகைமாதம் நான்குமுறைதிங்கட்கிழமைகள் தோறும் தத்துவஞ்ஞான சம்மந்தமானதும், உலகசமாசாரங்களும் நல்ல தமிழ் நடையில் பிரசுரிக்கப்பட்டுவருகிறது.

வருட சந்தா	ரூ 2—8—0	வேண்டியவர்கள் ஆத்மஞானபோதினி ஆபீஸ் "யாழ்ப்பாணம்" மானேஜரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
6 மாதத்திற்கு	ரூ 1—8—0	
பினங்கு சிங்கப்பூர்	ரூ 3—0—0	

கோயம்புத்தூர் கலாநிதி.

மாதம் இருமுறை கோயம்புத்தூரில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இதில் மத சம்மந்தமான விஷயங்களும் சமாசாரக்குறிப்புகளும் அடங்கியிருக்கும்.

வருட சந்தா	ரூ 2—0—0.
ஆறுமாதத்திற்கு	ரூ 1—0—0.

விற்பனைக்குத் தயாராயிருக்கும் புத்தகங்கள்.

தத்துவார்த்த மடங்கிய பகவத்கீதை	அணா 4
தென்இந்தியா சரித்திரம்	ரூ 1—12—0.
பலிஜவாரு புராணம் காலிகோ பைண்டு	ரூ 2—8—0.
இந்து விஷயநூல்	ரூ 2—0—0.

(வேண்டியவர்கள்) கலாநிதி பத்திராதிபர் ஸ்ரீமான் S. P. நரசிம்மலு நாயடு அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

இந்து சாஸ்திராபிமானி.

என்ற புத்தகமும் சிரேஷ்டமாலிகா, கல்லிடைக்கும்மி யென்ற புஸ்தகங்களும் திருநெல்வேலிஜில்லா கல்லிடைக்குரிச்சி வா. முத்துகிருஷ்ண ஐயரிடததில் பெற்றுக்கொள்ளலாம். இந்துசாஸ்திராபிமானி வெகு நல்ல புத்தகம். விலை அணா 6.

பகவத்கீதை.

யாவதேதாந் நிரீக்ஷேऽஹம் யோத்துகாமாநவஸ்திதாந் |
கைர்மயா ஸஹ யோத்தவ்யமஸ்மிந் ரணஸமுத்யமே ||௨௨||

யாவத் = எதுவரையில், எந்த இடத்திலிருந்துகொண்டு

அஹம் = நான்.

யோத்துகாமாந் = (யோத்தும் காமோ யேஷாம் தே) = யுத்தம் செய்பு மிச்சையுடன், அவஸ்திதாந் = வந்து நிற்கிற, ஏதாந் = இவர்களை, நிரீக்ஷே = பார்க்கிறேனோ (அதுவரையில் நிறுத்தும்), அஸ்மிந் = இந்த, ரணஸமுத்யமே = (ரணஸ்ய ஸமுத்யமே) = யுத்தாரம்பத்தில், மயா = என்னால், கைஃ ஸஹ = எவர்களுடன், யோத்தவ்யம் = யுத்தஞ்செய்யவேண்டியதோ (தத் = அதை), (நிரீக்ஷே = பார்க்கிறேன்).

தாற்பரியம்,

இப்படி இரதத்தை நிறுத்தினால் யுத்தம்செய்ய நிச்சயத்துடன் இவ்விடத்தில் எந்த வீரர்கள் வந்து நிற்கிறார்களோ அவர்களை நான் பார்ப்பேன். மேலும் இந்த யுத்த ஆரம்பத்தில் நான் எவர்களுடன் யுத்தம் செய்யவேண்டியதாயிருக்கும் என்பதையும் தெரிந்துகொள்ளுவேன்.

(ஆநந்தகிரி.)

1. யாவத்:— இரதத்தை நிறுத்திவைக்குமிடத்தை இது நிச்சயம்சொல்லுகிறது. எதுவரையில்போனால் அவர்களைப்பார்க்கமுடியுமோ அந்த இடத்தில் இரதத்தை நிறுத்தவேண்டியது என்பது கருத்து.

2. கைஃ ஸஹ:— அநேக இராஜாக்கள் வந்திருக்கிறார்கள். எவர்களுடன் நான் யுத்தஞ்செய்யவேண்டியது. எந்த இடத்திலும் எனக்குத் தடை ஏற்படவில்லை.

(மதுசூதனர்.)

1. யோத்துகாமாந் :—

இரண்டு சைன்னியங்களுக்கு மத்தியில் யுத்தம்செய்ய இச்சையுடன்; அதாவது நம்முடன் சந்திசெய்ய இச்சை இல்லை என்பது அர்த்தமாகிறது.

2. 𑌅𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 =பயந்து ஓடிப்போகாமல் நிற்கிற.

3. 𑌯𑌾𑌵𑌤𑍍:— இதற்கு இடம் அல்லது காலம் பரமாக அர்த்தம் செய்யலாம். எந்த இடத்தில் எல்லாரையும் பார்க்கலாமோ அல்லது அவர்களைப்பார்க்க எவ்வளவு காலம் செல்லுமோ அந்த இடத்தில் அல்லது அவ்வளவு காலம் வரையில் இரதத்தை நிறுத்து என்பது கருத்து.

4. 𑌕𑍈𑌃:— நீ யுத்தம் செய்கிறவன், யுத்தம் பார்க்கிறவனல்ல. ஆகையால் எவர்களை பார்க்கவேண்டுமோ என்று உனக்குத்தோன்றுவானேன் எனின் இந்த யுத்தமானது பந்துக்களுக்குள்ளேயே பரஸ்பரம் நடக்கவேண்டியதாக இருக்கிறது. ஆகையால் நான் எவர்ளுடன் யுத்தம் செய்யவேண்டியது. எனக்கு எதிராக இருந்து யுத்தம்செய்யத் தகுந்தவர்கள் எவர்கள். நான் யுத்தம்செய்யவேண்டியதுதானா? சரியான எதிரி இருக்கிறானா. இதை யெல்லாம் தெரிந்துக்கொள்ளத்தக்கது. ஆகையால் இரதத்தை மத்தியில் நிறுத்தவேண்டியது.

𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌵𑍇𑌕𑍍𑌷𑍇𑌽𑌹𑌂
𑌯 𑌏𑌤𑍇𑌽𑌤𑍍𑌰 𑌸𑌮𑌾𑌗𑌤𑌾𑌃 ।
𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌯 𑌦𑍁𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃
𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑌵𑌃 ॥ ௨௩ ॥

𑌦𑍁𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃=கெட்டபுத்தியுள்ள, 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌯= திருதராஷ்டிரனுடைய பிள்ளையாகிய துர்யோதனனுடைய, 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇=யுத்தத்தில், 𑌪𑍍𑌰𑌿𑌯𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑌵𑌃=இஷ்டத்தைச் செய்யவேண்டுமென்ற இச்சையுள்ள, 𑌯𑍇=எந்த, 𑌏𑌤𑍇=இவர்கள், 𑌅𑌤𑍍𑌰=இந்த இரண பூமியில், 𑌸𑌮𑌾𑌗𑌤𑌾𑌃=கூடியிருக்கிறார்களோ, 𑌤𑌾𑌨𑍍=அந்த, 𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑍍=யுத்தஞ்செய்ய இச்சிக்கிறவர்களை, 𑌅𑌹𑌂=நான், 𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑍇=பார்க்கிறேன்.

தாற்பரியம்.

திருதராஷ்ட்ரனுடைய துஷ்டபுத்தியுள்ள துர்யோதனனுக்கு இந்த யுத்தத்தில் பிரியம் செய்யவேண்டுமென்ற இச்சையுடன் யுத்தத்திற்காக எவாள் எவாள் வந்திருக்கிறார்களோ அவர்களை நான் பார்க்கும்படிச் செய்யும்.

(ஆநந்தகிரி.)

1. அவதாரிகை:—எதிரி இவ்லாத பக்ஷத்தில் எப்படி யுத்த ஆசை நிறைவேறும் எனின் சொல்லுகிறார்.

2. ஸமாகதா:—அநேக தேசங்களினின்றும் யுத்த ஆயுதங்களுடன் குருக்ஷேத்திரத்தில் சத்துரு பக்ஷத்தில் வந்து கூடியிருக்கிறார்கள். ஆகையால் எதிரிகள் வெகுபெயர்கள் என்று ஏற்படுகிறது.

3. தார்த்தராஷ்ட்ரஸ்ய:—அவர்களுக்கும் நமக்கும் முன்விரோதமில்லையே; அப்படியிருக்க எப்படி அவர்களுடன் யுத்தம் செய்யலாமெனின்:—சொல்லுகிறார்.

4. துர்புத்தே:—தன்னை இரக்ஷித்துக்கொள்ளும் வழியைத் தேடாமல் யுத்தத்துக்கு யத்தனம் செய்கிறவன்.

(ஸ்ரீதரர்.)

நான் எதிரிகளைப்பார்க்கும் வரையில் இரண்டு சேனைகளுக்குமத்தியில் இரதத்தை நிறுத்தும் என்பது அன்வயம்.

(மதுஸூதநீ)

ஸமாகதா:—இவர்கள் பந்துக்களானதால் பரஸ்பரம் சந்தியைச் செய்துவிடமாட்டார்களா; ஏன் யுத்தம் எனின். பீஷ்மதுரோணாதிகள் தன்னை இரக்ஷித்துக்கொள்ள உபாயமறியாத துர்யோதனனுக்குப் பிரியமானதை செய்யவந்திருக்கிறார்கள்; அவனுடைய துர்புத்தியை மாற்ற அவர்கள் வரவில்லை. ஆகையால் அவர்களை பார்ப்பது உசிதம் என்பது கருத்து.

(பாஷ்யோத்கர்ஷதீபிகா)

1. தார்த்தராஷ்ட்ரஸ்ய:— இந்த பதத்தால் திருதராஷ்ட்ரனும் துர்புத்தியுள்ளவன் என்பதும் சூசிப்பிக்கப்படுகிறது.

2. ப்ரியசிகீர்ஷவ:- பிரியத்தைச்செய்ய இச்சிக்கிறவர்களே தவிர சமர்த்தர்களன்று.

(ஆத்தியாத்மிக ஞானரத்னாவளி.)

1. ப்ரியசிகீர்ஷவ:- துர்யோதனனுக்கு பிரியம்செய்யும் பொருட்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லுவதின் கருத்து:— பீஷ்மர், துரோணர் முதலான சிலவீரர்களுக்கு துர்யோதனன் செய்வது பிசகு என்று தோன்றியிருந்தது. ஆயினும் இதுவரையில் அவனுடைய அன்னத்தைச் சாப்பிட்டிருக்கிறோம். ஆகையால் இந்த சமயத்தில் அவனைவிட்டுப்போகக்கூடாது என்று அவர்களுக்குத் தோன்றியிருக்கவேண்டும். உத்தேசமன்றியில் அவர்கள் அன்னியாயகக்ஷியில் சகாயம் செய்யமாட்டார்கள்.

இந்த விசேஷணத்தில் இன்னும் ஒரு பாவம் விளங்குகிறது. துர்யோதனனுடைய துர்புத்தியை நாசம் செய்து அவனுடைய கல்யாணத்தை பீஷ்மாதிகள் செய்யவேண்டியதாயிருக்க, அதைச்செய்யாமல் அவனுக்குப் பிரியமானதைச்செய்ய பிரவர்த்தித்து துஷ்டபுத்தியையே அவர்கள் பலப்படுத்தினது, அவர்கள் விசாரம்செய்யவில்லை என்பதைக்காட்டுகிறது.

(பின்னும் வரும்.)

(S. A.)

ஜுலை மீ௴	சின்னப்பாபிள்ளை	,,	திருவாரூர்		1—0
,,	வாசுதேவபிள்ளை	,,	விஜயபுரம்		1—8
,,	கோதண்டபாணி நாயக்கர்	,,	திருவாரூர்		1—8
,,	கி. ராமய்யர்	,,	மேலையூர்	07—08	1—8
,,	T. S. கல்லியாணராமய்யர்	,,	குளித்தலை	07—08	1—8
,,	T. M. குருபரானந்தசுவாமிகள்		வேட்டைக்காறன்புத்தூர்		1—2
,,	V. S. ஸாம்பசிவய்யர்	,,	பெங்களூர்		1—8
,,	விஸ்வனாதசாஸ்திரி	,,	நாகப்பட்டணம்		1—2
,,	A. சாம்பமூர்த்திய்யர்	,,	பரமக்குடி		1—8
,,	V. கல்லியாணராமய்யர்	,,	தூத்துக்குடி		1—8
ஆகஸ்ட்	சுப்பிரமணிய சாஸ்திரியள்	,,	ராமேசுவரம்		1—8
மீ௴ ச	கண்ணுஸாமிய்யர்	,,	மூங்கிலக்குடி		1—8
ந்தா.	டி. மீனாட்சிசுந்தரம்பிள்ளை	,,	திருப்பூர்		1—8
,,	நாராயணஸாமிய்யர்	,,	செல்லூர்		1—8
,,	குப்புஸாமிய்யங்கார்	,	ராஜமந்திரி		1—8
,,	சிவலோகமுதலியார்	,,	பூங்குடி		1—8
,,	ராகவய்யர்	,,	சித்தூர்		1—8
,,	குப்புஸாமிய்யர்	,,	அலிவலம்		1—8
,,	T. ஸ்வாமிய்யர்	,,	சேலம்		1—8
,,	ஆத்மனாதசாஸ்திரியள்	,,	திருத்துரைப்பூண்டி		0—8
,,	கிர்ஷ்ணஸாமிய்யர்	,,	திண்டுக்கல்		1—2
,,	அனந்தகிர்ஷ்ணய்யர்	,,	சேலம்		1—8
,,	ஹரிஹரசாஸ்திரியள்	,,	புதுகோட்டை		1—8
,,	A. விசுவனாதய்யர்	,,	அவனாசி		1—8
,,	S, A. கிர்ஷ்ணஸாமிய்யர்	,,	தூத்துக்குடி		1—8
,,	V. S. ஸஹஸ்ரநாமய்யர்	,,	அரிப்பாடு		1—2
,,	முத்துஸாமிமுதலியார்	,,	தாத்தய்யங்கார்பேட்டை	07-08	1—8
,,	சிகரடெரி சாந்தகட்	,,			
,,	சுசற்குணசபை	,,	திருப்பறங்குன்றம்		1—8
,,	S. S. சுருளாண்டி தென்கொண்டார்		அம்மாப்பட்டி		1—2
,,	நாராயணஸாமிய்யர்	,,	மன்னார்குடி		1—8
,,	M. V. வாஸுதேவய்யர்	,,	ஜெம்மல் மடுகு		1—8
,,	சுப்பிரமணியசாஸ்திரியள்		முட்டம்		1—8
,,	கிர்ஷ்ணய்யர்	,,	திருவங்காடு		1—8
,,	L. ராமானுஜய்யர்	,,	ஆத்தூர்		1—8
,,	வெங்கிடசுப்பய்யர்	,,	மதுராந்தம்,		1—8
,,	T. ஆதிநாராயணசெட்டியார்		சேலம்		1—8
,,	அராவமுதய்யங்கார்	,,	நன்னிலம்		1—8
,,	ஸர்வோத்தமராவ்	,,	பொரசம்பாக்கம்		1—8
,,	பாலகிர்ஷ்ணய்யர்	,,	நாகப்பட்டணம்		1—8
,,	T. A. சாமிநாதய்யர்	,,	திருச்சினாப்பள்ளி		1—8
,,	T. R. முத்துஸாமிபிள்ளை		திருச்சினாப்பள்ளி		1—8
,,	T. C. தியாகராஜபிள்ளை .,		மருதூர்		1—0
,,	ராமதுரையய்யர்	,,	மன்னார்குடி		1—8

ஆகஸ்ட்டு	சேஷய்யங்கார்	,,	மன்னார்குடி	1—8
,,	துரைஸாமி செட்டிார்	,,	ஷை	1—8
,,	கோவிந்தசாமி நாயக்கர்	,,	ஷை	1—8
,,	ராமசந்திரய்யர்	,,	ஷை	1—8
,,	கிர்ஷ்ணய்யர்	,,	ஷை	1—8
,,	வீரராகவசெட்டியார்	,,	குத்தாலம்	1—8
,,	கோதண்டராமய்யங்கார்	,,	செம்போடை	1—8
,,	O. S. வெங்கிட்டருமய்யர்		திருவாரூர்	1—8
,,	கிர்ஷ்ணஸாமிய்யங்கார்	,,	சீர்காழி	1-8
,,	சுப்பிரமணியய்யர்	,,	மீன்பிசல்	1—8
,,	வெங்கிட்டருயலுநாயடு	,,	மாணலூர்	1—8
,,	க. வெ. சிவருமய்யர்	,,	கோயம்புத்தூர்	1—0
,,	S. நரஸிம்மய்யர்	,,	காயங்களம்	1—8
,,	K. வைத்திருதய்யர்	,,	தஞ்சாவூர்	1—2
,,	துரைஸாமிய்யர்	,,	கும்பகோணம் அட்வான்சு	5—0
,,	07—1910	,,		
,,	வெங்கிடாஜலய்யர்	,,	ஜலக்கண்டாபுரம்	1—2
,,	குட்டி முருகப்பமுதலியார்		புச்சிரெட்டிப்பள்ளி	1—8
,,	N. C. கந்தஸாமிநாயக்கர்		கும்பகோணம்	1—8
,,	கிர்ஷணய்யர் செங்குவய்யர்		கோட்டயம்	1—2
,,	K. விட்டல்ருவ்	,,	சேலம்	1—8
,,	சுந்தரப்பய்யர்	,,	திருவாரூர்	1—8
,,	S. முதலியார்	,,	விரைபர்கதென் ஆப்ரிக்கா 07	1-14
செப்ட	H. ராமஸ்வாமிய்யர்	,,	கோட்டயம் —08	1—2
ம்பர்மீ	உத்திராபதியாபிள்ளை	,,	திருச்சங்காட்டங்குடி	2—0
,,	அய்யாகண்ணுபிள்ளை	,,	கொங்கராயநல்லூர் 07—08	3—0
,,	பஞ்சாபகேசஉடையார்	,,	அரையூர்	5—0
,,	விஜயரங்கமுதலியார்	,,	தஞ்சாவூர்	1—8
,,	சதாசிவராவ்	,,	தஞ்சாவூர்	1—8
,,	N. ராமனுதய்யர்	,,	பரவக்கரை 07—08	1—8
,	V. கிர்ஷணஸாமிய்யர்	,,	ஆடுதுரை 07—08	1—8
,,	கோபாலய்யர்	,,	நாவல்ப்பூண்டி 07—08	1—0
,,	M. திருவேங்கிடம்	,,	போர்ட் பிளேர்	1—8
,,	ஸத்தாறு சுப்பய்யர்	,,	ஆலப்பிழை 07—08	1—8
,,	G. T. அனந்தநாராயணபிள்ளை		சாலிக்கிராமம்	1—8
,,	சீனிவாசன்	,,	ஊத்தங்கரை	1—0
,,	S. சுப்பய்யாபிள்ளை	,,	நாகப்பட்டணம்	1—8
,,	மு. கோபாலசாமிசெட்டியார்		காங்கயம்	0-14
,,	V. ராமசந்திரய்யர்	,.	வீரராகவபுரம்	1—8
,,	M. K. சுப்பிரமணிய்யர்		கும்பகோணம்	1—8
,,	A. S. கிர்ஷ்ணசாமி சாஸ்திரியள்		பரமகுடி	1—8
,,	R. சேஷய்யங்கார்	,,	திருநல்வேலி	1—8

பிரம்மஞ்ஞானம்.

பரப்பிரம்மமும் அதன் வியக்தாவஸ்தைகளும்

சென்றதாயும், நடக்கின்றதாயும் நடக்கப்போகிறதாயுமுள்ள திரிகாலங்களிலேயும் சகல விடங்களிலும் வியாபித்துக் கொண்டும் ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் அசேதனங்களுக்கும் ஆதாரமாயும் குண ரகிதமாயும் ஸத்சித் ஆனந்தஸ்வரூபராயும் மனோவாக்குக்காயங்களுக்கு எட்டாதவராயும் சுத்த ஞானஸ்வரூபராயும் ஸகல உலகங்களையும் பிரகாசிப்பிக்கிறவராயும் சூரியன் சந்திரன் மின்னல் முதலியவைகளிடம் தோன்றும் தேஜஸிற்கு ஆதார பூதராயும் ஆனால் ஸ்வயத்தில் ஆதாரமற்றவராயுமுள்ள ஓர் பொருள் இருக்கவேண்டுவது அவசியம். அப்படியிருக்கிறதென்பதை கேவலம் மனதுமுதலிய இந்திரியங்களால் சிந்திப்பதற்கும் அஸாத்தியமானாலுங்கூட, அதனிடத்துத் தோன்றியிருக்கும் அநேக வியக்தப்பொருள்களின் குணங்களால் இவ்விதமிருக்கவேண்டுமென்பதை ஊகிக்கலாம். வியக்தமென்று சொல்லும்பொழுதே அவ்வியக்தம் ஒன்று இருக்கிறதென்றுவிதிக்கிறது. ஜ்வலித்துக்கொண்டிருக்கிற நெருப்பிலிருந்து ஸதிருசங்களான அநேகம்பொறிகள் எப்படிவெளிக் கிளம்புகின்றனவோ அதைப்போலவே பரப்பிரம்மத்தினிடமிருந்து அநேக ஜீவகோடிகள் உண்டாகி அதனிடத்திலேயே லயமடைகின்றன. எப்படி சூரியனிடத்திலிருந்து உதயத்தில் அநேக ஸத்ருச கிரணங்கள்தோன்றி அஸ்தமனத்தில் அதனிடத்திலேயே லயத்தையடைகின்றதோ அதைப்போலவே சகல ஜீவர்களும், அப்பரப்பிரம்மத்தினிடமிருந்து உண்டாகி அதனிடத்திலேயே லயத்தையடைகிறார்கள். எப்படி ஸமுத்திரத்தினிடமிருந்து அநேக அலைகள் தோன்றி மறுபடியும் ஸமுத்திரத்திலேயே லயத்தை யடைகிறதோ அதைப்போலவேஸமஸ்தமும் பரப்பிர்ம்மத்தினிடமிருந்து உண்டாகி அதினிடத்திலேயே லயமடைகின்றன. ஆனால் ஸமுத்திரத்திலிருந்து உண்டாகப்பட்ட அலைகளும் நுரைகளும் எப்படி உண்மையில் சமுத்திரஜலத்தைவிட வேறன்றோ ஆனால் அதனுடைய மாறுதல் அதாவது விகார

மோ அதைப்போலவே ஸகலவியக்தப்பொருள்களும் அப்பரப்பிரம்மத்தின் விகாரமேயல்லாது வேறன்று. அவ்வியக்தநிலைமையில் பரப்பிரம்மமென்றும் வியக்த நிலைமையில் ஸ்ரீமந்நாராயணனென்றும் ஸ்ரீமஹாதேவனென்றும் சொல்வதுண்டு. எவ்விதநாமத்தோடு ஜனங்கள் பேரிட்டழைத்தாலும் பாதகமில்லை. பரப்பிர்ம்மமே வியக்தமான புருஷனாக தோன்றினார் என்று கிரகித்தால் போதுமானது. இந்த வியக்தாவஸ்தைக்கு அ பரப்பிர்ம்மமென்றும் புருஷோத்தமனென்றும் சொல்லுவதுண்டு. அப்படி வியக்தமாகவேண்டியதற்கு காரணம் அப்பரப்பிர்ம்மத்தைத் தவிர நமக்குத்தெரியாது. ஆனால் தைத்திரியோபநிஷத் ஆநந்தவல்லிற் சொல்லியபடி அந்த பரமாத்மா அநேகமாக ஆகக்கடவேன், உண்டாகக்கடவேன் என்று இச்சித்து ஆலோசனைசெய்து சகலத்தையும் சிருஷ்டித்து அவைகளுக்குள் பிரவேசித்து சேதனா சேதனாத்மகமாயும் உருவமுள்ள வஸ்துக்களாயும் உருவமில்லாத வஸ்துக்களாயும் பெயரிடப்பட்டவஸ்துக்களாயும் பெயரிடப்படாதவஸ்துக்களாயும் அறிவுள்ளவஸ்துவாயும் அறிவில்லாத வஸ்துவாயும் ஆயிற்று, "அநேகமாக ஆகக்கடவேன்" என்றதை பிரம்மஸங்கல்பமென்று சொல்லுவார்கள். அந்த ஸங்கல்பமுண்டாயிற்றென்றால் பிரம்மத்தினிடம் சில சலனங்கள் உண்டாயிற்றென்று கொள்ளத்தக்கது. அக்காலத்திற்கே பிரவிர்த்திகாலமென்றும் மன்வந்தரமென்றும் பலவாறாகச் சொல்லுவதுண்டு. ஸங்கல்பமற்றிருக்குங்காலத்தில்தான் பிரம்மத்தில் ஸ்திரத்தன்மை யேற்படுகிறது. அதற்கு நிவர்த்திகாலமென்றும் பிரளயகாலமென்றும் இராக்காலமென்றும் சொல்வது வழக்கம். ஸமஸ்தங்களும் உண்டாவதற்கு பிரம்மத்தைத்தவிர வேறு அதிஷ்டாதாயில்லாதபடியால் அதையே கர்த்தாவென்றும் புருஷனென்றுஞ் சொல்லுவார்கள். வேறு உபாதானமில்லாதபடியால் அதையே பிரகிருதியென்றும் சொல்லுவார்கள். ஆகையால் புருஷோத்தமனாகிய வியக்தமூர்த்தியே புருஷனாகவும் பிரகிருதியாகவுந் தோன்றினான். பரப்பிர்ம்மமும் வியக்தபுருஷனும் இந்திரியங்களற்ற ஸ்வரூபம் அமூர்த்தமென்று சொல்லுவது வழக்கம். இது முக்தஸ்வரூபம். இதுவே பரமென்று சொல்லப்படுகிறது. ஹிரண்ணியகர்ப்பன், ருத்

திரன், சூரியன், நக்ஷத்திரங்கள், சகலகிரகங்கங்கள், மிருகங்கள் பக்ஷிகள், தேவதைகள் யாவும் மூர்த்தஸ்வரூபமென்றும் பத்த ஸ்வரூபமென்றுப் அபரமென்றுஞ் சொல்லப்படுவதுண்டு. முக்தஸ்வரூபனான மேற்சொன்ன புருஷோத்தமனிடமிருந்து புருஷப்பிரகிருதி உண்டாயிற்று. இதற்கே சிலர் ஈசுவரனென்றும் பிரத்தியகாத்மாவென்றுஞ் சொல்லுவார்கள். இது பிரகிருதியும் புருஷனும்கூடிய அவஸ்தையாம். பிரம்மாண்டத்திற்கு நிமித்தகாரணம் சைதன்னியமாகிய புருஷனும் உபாதானகாரணம் பிரகிருதியுமாகின்றன. இவைகள் இரண்டும் சேர்ந்திருக்கும் ஸ்திதிக்குத்தான் ஈசுவரனென்றும் புருஷப்பிரகிருதியென்றும் சொல்லுகிறார்கள். இந்த புருஷனும் பிரகிருதியும் புருஷப்பிரகிருதியின் இரண்டு வியக்ததத்தோற்றங்கள். இதில் புருஷன் சைதன்னிய ரூபமாயிருந்துகொண்டு மன்வந்தராரம்பத்தில் தனது லயஸ்திதியைவிட்டும் முடிவில் லயத்தையுமடைகிறான். இவன்தான் ஞாதாவென்றும் க்ஷேத்திரக்ஞன் என்றும் சொல்லப்படுகிறான். மற்றவைகள் யாவும் இவன் பிரதிபிம்பங்கள். அப்புருஷனே ஸச்சிதாநந்தஸ்வரூபி. இவனையறியவேண்டியதற்கும் அடையவேண்டியதற்குமே சகலபதங்களும் ஒவ்வொரு பதங்களின் பிரிவுக்குத்தக்கபடி அனுஷ்டானங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட ஈசுவரனுக்குங்கூட பிரம்மம் ஸ்வயமாக அதாவது தான் உள்ளபடி காணப்படாமல் ஒரு (மறைபு, அல்லது திரை) யால் மூடப்பட்டதுபோல் காணப்படுகிறான். அந்த மூட்டத்திற்குத்தான் மூலப்பிரகிருதி யென்று பெயர். அதன் ஸ்வரூபத்தை நாம் உள்ளபடி யறியமுடியாது. ஸமஸ்தததிற்கும் உபாதான காரணம் இந்த மூலப்பிரகிருதியேயாகும். புருஷன் சச்சிதானந்த ஸ்வரூபியா யிருப்பதுபோல இப் பிரகிருதியும் ஸத்துவ ரஜோ தமோ குணங்களோடு கூடியது அதாவது அம்மூன்று ஸ்திதியையுடையது.

மன்வந்தராரம்பத்தில் பரப்பிரம்மம் ஈசுவரனாகவும்பிரகிருதியாகவும் தோற்றிய பிறகு தன் சக்தியை ஈசுவரன் மூல

மாய் வெளிப்படுத்துகிறது. சூரியனுடைய தேஜஸ்ஸானது சூரியனில்லாத காலத்திலிருந்தாலும் சூரியன் உதயமானபிறகுதான் சூரியன் மூலமாக வெளியாவதுபோல பரப்பிரம்மத்தின் சக்தியும் ஈசுவரன் மூலமாக வெளிப்படுகிறது. இந்த சக்திக்குத்தான் பராசக்தியென்றும் தெய்வீப் பிரகிருதியென்றும் பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தெய்வீப்பிரகிருதியின் பிரகாசம் உஷ்ணம் மூலப் பிரகிருதிபிற்படவே இறு விகாஸத்தை யடைந்தது. ஈசுவரனுடைய மனதில் இனி யுண்டாகப் போகிற பிரம்மாண்டத்தினுடைய பாவனையுண்டாகிறது. இந்த பாவனை முழுமையும் ஈசுவரனுடைய பராசக்தியாகிய தெய்வீப் பிரகிருதி கிரகித்து மூலப்பிரகிருதியினிடம் சேர்ப்பித்துவிடுகிறது. இப்படி தெய்வீப் பிரகிருதி ஈசுவரனிடம் பாவனையை கிரகித்தவுடனே மூலப்பிரகிருதி விகாஸத்தையடைந்து அந்த பாவனையை கிரகித்துக்கொள்ளுகிறது. உடனே பிரம்மாண்டம் வெளிப்படுகிறது. மண்ணினுல் செய்யப்பட்ட கட முதலியவைகளுக்கு சக்கரம், தண்டம் முதலியவைகள் குயவனுக்கு எப்படி ஸாதகமோ அதைப்போலவே பிரம்மாண்டத்தைப் பிரகிருதியினிடமிருந்து உண்டுபண்ணுவதில் தெய்வீப்பிரகிருதி ஈசுவரனுக்கு சாதகமாயிருக்கிறது. ஆகையால் இந்த பிர்ம்மாண்டமானது ஈசுவரன் தெய்வீகப்பிரகிருதி மூலப்பிரகிருதி முதலியவைகளிடத்தில் காரணம் ஸூக்ஷ்மம், ஸ்தூலம் முதலிய ஸ்திதியிலிருந்ததாவவே எண்ணலாம்.

இந்தப் பிரம்மாண்டம் 7 வித ஸ்திதியிலமைந்து நிற்கிறது. அதாவது 7 வித விகாரத்தோடு கூடியிருக்கிறது. அந்த ஏழு வித அவஸ்தைகளுக்கும் 7 லோகங்கள் என்று பெயர். அவைகளில் முதல் லோகமானது ரொம்ப லேசான நுண்ணிய பிரகிருதி அணுக்களால் ஆகியது. இதில் ஈசுவர சைதன்னியம் வெகு ஜாஸ்தியாயுள்ளது, இதற்குத்தான் ஸத்தியலோகமென்று சொல்வது. 2-வது லோகமானது முதல் லோகத்தைவிட சற்று தடித்த பிரகிருதி அணுக்களாலாகியது. ஈசுவர சைதன்னியமும் கொஞ்சம் குறைந்துதான் நிற்கிறது. இதுவே தபோலோகம் இதற்கடுத்த லோகமானது பின்னும் கொஞ்சம் தடி-

த்த பிரகிருதி யணுக்களா லர்கியது. ஈசுவர சைதன்னியமும் பின்னும் கொஞ்சம் குறைந்துதான் நிற்கிறது. இம்மூன்று லோகங்களும் அரூபமாயும் கடைசி 4 லோகங்களும் ரூபமாயு மிருக்கின்றன. ரூபலோகங்களும் அரூபலோகங்களைப்போலவே கொஞ்சங்கொஞ்சமாய் பின்னும் தடித்த பிரகிருதியணுக்களால் அமைக்கப்பட்டு ஸ்தூலாவஸ்தையில் மேன்மேலும்விர்த்தியாய்க் கொண்டு வந்திருக்கின்றன. இப்படி ரொம்பவும் ஸ்தூலாவஸ் தையை யடைந்த லோகந்தான் நமக்கு கோசரமான பூலோகம். எப்படி ஸ்தூலமாய்க் காணப்படுகிற பனிக்கட்டியானது ஜலமாயும், ஆவியாயும் பின்னும் ஸ்தூலக்கண்ணுக்குப் புலப்படக் கூடாததாயுள்ள அதி சூட்சுமமான விகாரங்களை யடைகிறதோ அதைப்போலவே நமது பிரம்மாண்டத்தின் 7 லோகங்களின் விகாரங்களையும் கிரகிக்கவேண்டும். தவிரவும், முதல் லோகம் சுத்த சைதன்னிய ஸ்வரூபம். அதின் உபாதியாகிய புத்தி 2-வது லோகத்தில் பிரபல்லியமாய் விளங்குகிறது. இந்த புத்தி யன்றியில் அந்த சைதன்னிய ஸ்வரூபத்தை யறிய வொருவராலும் அசக்கியம். 3-வதுலோகம் மானஸிகம்- இதில்தான் ரூபம் வியக்தமாய் முதல் முதல் காணப்படுகிறது. பிரகிருதி இந்த விடத்தில் தான் முதல் முதல் உருவத்தோடு கூடியிருக்கிறது. இவ்விடத்தில் ஆத்மா பிரத்தியக்ஷ ஸ்வரூபனாக வெளிப்பட்டுதான் அறியவேண்டிய பெருளை யபேட்சிக்கிறான். 4 வது லோகம் சரீர சம்பந்தமான இச்சைகள். இவைகள் இவ்விடத்தில் ரூபங்களோடு கூடியிருக்கின்றன. 5-வது பூமி பிராண லோகம் 6-வது பூமி நமதுஸ்தூலத்தைவிட சற்று லேசான பதார்த்தங்களால் ஆகியது. 7-வது தான் நமது ஸ்தூல பூலோகம்.

இவைகளில் பூ, புவர், சுவர் ஆகிய மூன்று லோகங்களும் கல்பந்தோறும் உண்டாக்கப்படுகின்றன, ஜன. தப, ஸத்திய லோகங்கள் அவ்வாறு உண்டாக்கப்படுவதில்லை. மகர்லோகமோ வென்றால் மேல் மூன்று லோகங்களுக்குங் கீழாகவும் கீழ்மூன்று லோகங்களுக்கும் மேலாகவுமிருக்கிறது. அதில் கல்ப முடிவில் ஜன சூன்னியமாவதைத் தவிர லோகம் நசிப்பதில்லை. ஒவ்வொரு

லோகத்திற்கும் ஞானம் அஞ்ஞானமாகிய இரண்டுவித தசைகளிருப்பதால் லோகங்கள் மொத்தத்தில் 14 ஆகின்றன.

கீழ் 7 லோகங்கள். | மேல் 7 லோகங்கள்.

(1)	அதள	ஸத்திய	(1)
(2)	விதள	தபோ	(2)
(3)	சுதள	ஜன	(3)
(4)	தலாதள	மஹர்	(4)
(5)	ரஸாதள	சுவர்	(5)
(6)	மஹாதள	புவர்	(6)
(7)	பாதாள	பூ	(7)

இதில் அதள முதல் பாதாளலோகம் வரையில் பிரகிருதியினணுக்கள் அதிசூட்சுமமும் லேசான ஸ்திதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் விர்த்தியாகி பூலோகத்தில் நன்றாய் தடித்து நின்றது. அவைகளுக்குள் பிரவேசித்து உள்ளும் புறமும்பரவி பிரவகித்துவரும் ஈசுவர சைதன்னியமானது வர வர வெகு தடித்த பிரகிருதி அணுக்களால் மூடப்பட்டபடியால் ஈசுவரனுடைய பூர்ண சக்தியோடும் வித்துரூபமாய் ஸ்தாவராதி முதலியவைகளில் இருப்பதுபோல் அமைந்து நின்றது. இந்த தசைக்குத்தான் அவித்தை அல்லது அஞ்ஞான தசையென்று பெயர். இதனால்தான் சகல சம்சார தாபங்களும் ஏற்படுகிறது. இப்படி பிரகிருதியால் மூடப்பட்டால்தான் சம்சாரம் தாரதம்மியமுள்ளதாகவுங் காணப்படுகிறது. எப்படியென்றால் அசேதனங்களில் அந்த சக்தி மிகவும் அற்பமாயும் தாவரங்களில் அதற்கு கொஞ்சம் அதிகமாயும் ஊரும் ஜந்துக்களில் அதற்கு மேற்பட்டதாயும் இவ்வாறே பக்ஷி மிருகங்கள் பசுக்கள் மனிதர் நாக கந்தர்வ யக்ஷாதி தேவதைகள் முதலியவர்களிடம் அந்த சக்தி க்ரமேண அதிகமாயுங் காணப்படுகின்றது. பூலோகம் வரையில் வெகு தடித்த பிரகிருதி யணுக்களால் மூடப்பட்டு வந்த ஈசுவரசைதன்

னியமாகிய அந்த சக்தியானது மேற்சொன்ன பிரகாரம் தாவர முதல் தேவதாதி ஸ்வரூபங்கள் வரையில் பிரகிருதியிலிருந்து விடுவித்துக்கொண்டு முடிவில் தன் நிலைமையடைகிறது. லோகங்கள் இதிற்கண்டபடி வரிசையாய் ஒன்றின் கீழ் ஒன்றிருப்பதாக எண்ணக்கூடாது. மேல் லோகங்கள் ஒவ்வொன்றும் கீழ் லோகங்களில முறையே சம்பந்தப்பட்டு ஊடுருவி உள்ளும்புறமும் பின்னப்பட்டிருக்கிறது. பிரகிருதியின் சூட்சும அல்லது தடித்தஸ்திதிலும் சைதன்னிய விகாஸத்திலுந்தான் வித்தியாசம். ஆகையால்தான் ஒவ்வொரு லோகத்தின் விகாஸ அவஸ்தையின் குணங்கள் வெவ்வேறென்று சொல்லப்படுகிறது. நம்முடைய சூரியமண்டலத்திலுள்ள செவ்வாய் புதன் முதலிய கிரகங்களுக்கு 7 அவஸ்தைகளிருப்பதுபோல நமது பூலோகத்துக்கும் 7 அவஸ்தைகளுண்டு. இந்த அவஸ்தைகளுக்கு துவீபங்களென்று சொல்லப்படுகிறது. பூமியின் தற்கால அவஸ்தைக்கு ஜம்புதுவீபமென்று பெயர். இவ்வேழும்சேர்ந்துதான் கிரகமாலிகை என்று சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் அவஸ்தைகள் அல்லது ஸ்திதி யென்று சொல்லுவது பிரக்ஞாபேதத்தைத்தவிர வேறு ஒன்றுமில்லை. அவைகளையும் அவைகளிலுள்ள ஜீவர்களின் நிலைமையையும் அறிவதற்கு ரொம்பபக்குவிகளுக்குத்தான் முடியும்.

நமது பூலோகத்திற்கு எழு ஸ்திதியென்று சொன்னோம். அவைகளில் முதலாவது ஸ்திதி யேற்பட்ட சிலகாலம் சென்று 2-வது ஸ்திதியும் அதற்கு சிலகாலம் சென்றபிறகு 3-வது ஸ்திதியும் இவ்வாறே முறையே 7 ஸ்திதிகள் ஏற்படுகின்றன. இவைகளில் சைதன்னியம் வரிசையாய் ஏழுதரம் சுற்றிவருவதற்கு ஒரு சுற்று என்றுபெயர். இப்படி ஏழுதரம் சைதன்னிய சுற்றுவந்தபிறகு இதர கிரகங்களுக்கு சைதன்னியம் ஓடுகிறது. அப்பொழுது இந்த கிரகத்திற்கு நாசம் அல்லது பிரளயம் ஏற்படுகிறது. முதல் மூன்றுசுற்றுகளில் இந்த பூமியானது ரூபத்தையடைந்து 4 வது சுற்றில் ஸ்திரப்பட்டு 5 முதல் 7 சுற்றுக்களில் மறுபடியும் கிரமேண சூட்சுமதசையை அடைகிறது. ஈசுவரசைதன்னியமானது முதல் முதல் மூன்றுவிதமான திருஷ்டிக்குப் புலப்படக்கூடாத பௌதிகரூபங்களிலும் (elemental

essence) பிறகு பாஷாணங்களிலும் (minerals) பிறகு கந்த மூலங்களி (vegetables)லும் பிறகு மிருகங்களி (animals) லும் பிறகு மனிதர்களிலும் பிரவேசித்து விளங்குகிறது. இது தான் சிருஷ்டி முறையென்று சொல்லப்படுகிறது. இந்த சிருஷ்டி முறையையே அநேகர்கள் அநேகவிதமாய்ச் சொல்லுவார்கள். உண்மையில் பரப்பிரம்மத்தின் சுத்தசைதன்னியமே பற்பலரூபங்களைத் தரிக்கிறது. ஏற்கனவே சொல்லியபடி சைதன்னியமானது ஸ்தாவர கந்தமூல சிருஷ்டியில் விகாஸத்தையடையாமல் மிருகசிருஷ்டியில் பிரஜ்ஞை வெளிப்பட்டு உணர்ச்சி இச்சைகள் வெளிப்பட்டும் மானிட சிருஷ்டியில் சகலமனோதர்மங்களும் நன்ருய் விளக்குகிறது.

முந்தி சொல்லிய ஒவ்வொரு சுற்றையும் ஒவ்வொரு கல்பமாகச் சொல்லலாம். முதலாவது கல்பத்தில் சைதன்னியமானது பாஷாணம் கந்தமூலம் முதலியவைகளிலும் 2 வது கல்பத்தில் மிருகங்களிலும் 3 வது கல்பத்தில் மனிதனிடம் பிரவேசித்து 4-வது கல்பமாகிய இந்த பிரகிருத கல்பத்தில் மனிதன் இந்த ஆகாரத்தை யடைந்திருக்கிருன். இனி வரப்போகிற மூன்று கல்பங்களிலும் மனிதன் சூட்சும ஆகாரத்தையடைந்து தெய்வரூபத்தைத் தரிப்பான். மானிடவர்க்கங்கள் முக்கியமாய் 7. அவைகள் ஒவ்வொன்ருக்கும் 7 உட்பிரிவுகளுண்டு. அந்த உட்பிரிவுகளும் அவ்வாறே பிரிந்து நிற்கின்றன. இப்போது இருக்கும் வர்க்கம் 5-வது. ஒவ்வொரு வர்க்கத்திலும் ஒவ்வொரு அம்சம் பக்குவமாகிறது. இப்போது நாம் 5-வது வர்க்கத்திலிருக்கிறோமாகையால் 5-வது அம்சமாகிய மனது விகாசத்தையடைந்து வருகிறது. இதற்கு சாக்ஷி ஒவ்வொரு தேசத்தார்களையும் அவரவர்கள் மனோபாவங்களையும் இப்பொழுது கவனித்தால் நன்குவிளங்கும். இனி 6, 7 வர்க்கங்களில் மேல் 2 அம்சங்கள் நன்ருய் விருத்தியடையும்.

(பின்னும் வரும்.)

மார்ஜுக்கர்களுக்கும்

ஸ்ரீ வெங்கடேசுவரதீட்சிதர் அவர்கள்.

இம்மகானைப்பற்றி சென்னை ராஜதானியில் தெரிந்துகொள்ளாத ஹிந்துக்கள் இருக்கவேமாட்டார்கள். அவர்கள் காலஞ்சென்று வெகுநாளாயினும் அவர்களுடைய பக்திபாகிய பிரசம்சையால் யாவரும் தெரிந்துகொண்டிருப்பார்களென்றே நம்புகிறேன். ஆயினும் அவர்களுடைய வரலாற்றைக் கொஞ்சம் தெரிந்தவரையில் இல்விடத்தில் பிரஸ்தாபிக்கப்படும்.

இவர் தஞ்சை ஜில்லாவில் திருவிடமருதூருக்குச் சற்றுவடமேற்கிலுள்ள திருவிசநல்லூர் என்ற கிராமத்தில் ஜனித்தவர். இவர்களை "அய்யாவாள்" என்ற நாமத்துடன் ஜனங்கள் அழைப்பது ஸகஜம். அவர்கள் ஜனனமான காலமும் எவ்வளவு காலம் வசித்தார்கள் என்பதும் சொல்வது இப்பொழுது கூடவில்லை. அவர் புதுக்கோட்டை தொண்டமான் ராஜாவுக்கு ரொம்பவேண்டியவரான "சதாசிவப்பிர்ம்மத்தோடு" சேர்ந்து சாஸ்திராப்பியாஸங்கள் செய்ததாகத் தெரியவருகிறது.

அவர் ரொம்ப ஏழ்மையான குடும்பத்தில் ஜனித்தவர். ஓர் சிறிய வீடும் கொஞ்சம் பூமியும் இருந்தது. அவரோடுகூடப் பிறந்தவர்கள் ஒருவருமில்லை. பால்லியத்தில் தன் பிதாவால் சாஸ்திராப்பியாஸஞ்செய்துவைக்கப்பட்டார். பிதாவின் மரணகாலத்தில் அவர் ஒரு பெரியகவியாக ஆய்விட்டார். சகலசாஸ்திரங்களிலும் இலக்கண இலக்கியங்களிலும் தக்கதேர்ச்சியடைந்தவரானார். அதோடு ஈசுவரனிடத்து பக்தியும் கிரமேண விர்த்தியாய்க்கொண்டேவந்திருந்தது. அவர் பால்லிய முதலே உலகத்தினுடைய நசுவரமான வாழ்வை நன்குணர்ந்து அவ்விஷயங்களில் பற்றுதல் அற்றவராகவே யிருந்துவந்தார். எப்பொழுதும் ஈசுவரனைக்குறித்து ஸ்தோத்திரங்கள் செய்துவந்தார். அவர் கிரகஸ்தாசிரமத்திலிருந்துகொண்டு மானஸிக ஸந்நியாஸியாகவுமிருந்துவந்தார். அவருடைய பெருமை வெகு நாள்வரையில் கிராமத்

திலுள்ள ஜனங்களுக்குத்தெரியவில்லை. அவரைப்பற்றி முக்கிய மாய் தெரிந்தமட்டில் பிரஸ்தாபிக்கப்படும்.

அவர் யாராயிருந்தாலும் பசியென்றால் அவருக்கு அன்னமிடுவது வழக்கம். ஒரு நாள் அவர்சாப்பிட உட்காரும்பொழுது "பசி, கொஞ்சம் அன்னமீடவேண்டும்" என்று கதறும் கூச்சலைக்கேட்டார். உடனே அவர் எலையைவிட்டு எழுந்திருந்து வாசலில் வந்து பார்த்தபொழுது ஒரு சண்டாளன் அவ்வாறு அழுவதைப்பார்த்து உடனே அவனை யழைத்துவந்து சம்பிரமமாக அவனுக்கு ஆகாரம்செய்துவைத்தார். அக்கிரகாரத்திலுள்ள பிராம்மணர்கள் ஒன்று சேர்ந்து நீசனுக்கு அன்னமிட்ட தோஷத்திற்காக ஜாதிப்பிரஷ்டம் செய்வதாக யோஜித்தார்கள். பரமபக்தராகிய 'அய்யாவாள்" தான்செய்தது தன்மனதிற்கேற்ப பரமார்த்தமாய் தொஷகரமில்லாதது என்று தெரிந்திருந்தபோதிலும் ஜனங்களுடைய திர்ப்திக்காக தான் எவ்விதப்பிராயச்சித்தம்வேண்டுமென்றாலுஞ் செய்துகொள்வதாய்ச்சொல்ல அந்த பிராமணர்கள் கங்காஸ்நாநத்தைத் தவிர வேறுசரியான பிராயச்சித்தம் தங்களுக்குத் தோற்றவில்லை யென்றார்கள்.

அதற்கு இந்த பக்தர் காசிக்கே போய் கங்கையில் ஸ்நாநஞ் செய்யவேண்டுமோ? அல்லது கங்கையே தனதிருப்பிடத்தில் பிரவகித்துவந்தால் அதில் ஸ்நாநஞ்செய்தல் போதாதா "என்று வினவ, அதற்கு ஜனங்கள் இவர் மமதையால் அவ்வாறு சொல்கிறதாகவும் உள்ளபடி கங்கையை அங்கு வரவழைப்பது அஸாத்தியமென்றெண்ணி அவர் கேட்ட 2-வது பிரச்னப்படி "சரிதான் அப்படியே செய்யுங்களென்றார்கள்." உடனே இவர் தனது கிரகத்திற்குள் சென்று அங்கிருந்த கிணத்தடியில் உட்கார்ந்து கொண்டு சிலமந்திரங்களால் ஸ்தோத்திரஞ்செய்து சிலகாலம் வரையில் "பேச்சுமூச்சு அன்றியில் தியானபரராய் நிஷ்டையிலிருக்க ஒரு மணிநேரத்திற்குள்ளாக ஆச்சரியம்! பாருங்கள்; அந்த கிணற்றிலிருந்து குபீர் குபீர் என்று குமிழியிட்டும் பிரவகித்து வரும் தண்ணீரானது பெரிய நதியைப்போல் பிரவகித்து இடுப்புவரையிலுள்ள ஜலம் வீடுவாசல் நெடுகிலும் ஓடிவருவதைப்பார்த்த சகலபிராம்மணர்களும் ரொம்ப ஆச்சரியமடைந்த

வர்களாய் அய்யாவாளிடம் அந்தர்கதமாயிருந்த பக்தியின் விசேஷத்தை நோக்கியாநந்த மடைந்தும் அந்த பிரவாகமானது பின்னுஞ் சற்று நேரமிருக்குமாயின் வீடுகள் சாமான்கள் மாடுகள் கன்றுகள் யாவற்றும் அழிந்துவிடுமென்று பீதியடைந்து அம்மகானை நோக்கித் தங்களை ரக்ஷிக்கும்படி பிரார்த்திக்க உடனே அவர் இரக்க முற்று பின்னுஞ் சில மந்திரங்களைச் சொன்னவுடன் வெள்ளம் வடிந்து ஜலம் குமிழியிட்டுக் கிளம்புவது ஓய்ந்தது. அன்று முதல் அவரை அந்த கிராமவாஸிகள்தெய்வமாகவே பாவித்து வந்தார்கள்.

தவிர ஒரு நாள் தெருவின் நெடுகே அவர் போய்க்கொண்டிருக்கையில் ஒரு வீட்டில் அழுகைக்குரல் கேட்டது. என்னவென்று பார்க்கலாமென அவர் அந்த வீட்டிற்குள் நுழைந்தவுடன் ஒரு குழந்தையிறந்திருப்பதையும் அக்குழந்தை இறந்தபிறகுமுள்ள அழுகையும் பார்த்தபொழுது அக்குழந்தையின் தாயார் அவரை சாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ் செய்து குழந்தையை அவர் பாரத்தில் வைத்து அதை இரட்சிக்கும்படிக்கும் இல்லாவிட்டால் தனக்கு மரணம் வரும்படி செய்யும்படிக்கும் வேண்டினாள். இவர் அவர்கள் படுந்துயரத்தைக்கண்டு தான்உட்கார்ந்து பக்தி பூர்வகமாய் பரவசமாய் 27 சுலோகங்களால் அக்குழந்தையை யிரட்சிக்கும்படி ஈசுவரனைப் பிரார்த்திக்க 27-வது சுலோகம் முடிந்தவுடன் அந்த பிரேதக்குழந்தை யெழுந் திருந்து குதித்து விளையாட வாரம்பித்தது.

குதித்து விளையாட வாரம்பித்தது.

தவிர, அவர் பிரதிதினமும் ஒருமைமயில் தூரத்திலுள்ள திருவிடமருதூர்போய் ஸ்ரீமகாலிங்கசுவாமி தரிசனஞ்செய்து வருவது வழக்கம். அவர் ஒருநாள் சாயந்திரம் திருவிடமருதூருக்குப் போகும்பொழுதுகாவேரி தாண்டவேண்டி யிருந்தது. ஓடக்காரன் நேரமாய்விட்டபடியால் வீட்டிற்கு போய்விட்டான். இவரோ நீந்துவதற்குப் பழக்கமில்லாதவர். என் செய்வார்? கடவுளை நோக்கிக்கொஞ்சம் ஸ்மரணைசெய்துகொண்டிருந்த பொழுது ஒருவர் தான் ஓடந்தள்ளுவதாக அவருக்கு வாக்களிக்க இவர் மிகவும் சந்தோஷித்து அப்படியேயாகட்டுமென்று விசு

வாசத்துடன் சொல்ல அதிசீக்கிரத்தில் ஓடத்தை அக்கரையில் கொண்டுபோய் சேர்த்துவிட்டு அவர் மறைந்தார்.

இந்த பிராம்மணர் அதிவேகமாய்க் கோவிலுக்குச் சென்றார். அவ்விடத்தில் கோயிற்கதவுகள் சாத்திவிடப்பட்டிருந்தது. சுவாமி தர்சனஞ்செய்யக்கூடவில்லையேயென்ற வருத்தத்தினால் மறுபடியும் அவர் ஈசுவரனை தியானிக்க ஈசுவரன் மறுபடியும் அர்ச்சகராகத்தோன்றி கோவில் கதவுகளைத்திறந்து இவருக்கு சுவாமி தர்சனஞ் செய்வித்து இந்த பிராமணன் திரும்பி திருவிசநெல்லூருக்குச்செல்லும்பொழுது காவேரிக்கரையில் ஓடக்காரனாக மறுபடியும் தோன்றி ஓடத்தில் அவரை யேற்றி அக்கரையில் கொண்டுபோய் விட்டார். உடனே அவர்கள் ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.

மறுநாள் காலையில் கோவில் குருக்கள் வழக்கம்போல் துறவுகோல்களை யெடுத்துக்கொண்டு கோவிலுக்கு வரும்பொழுது முதல்நாள் தான் பூட்டியிருந்த கதவுகள் திறந்திருப்பதையும் சுவாமியினிடம் புஷ்பங்கள் புதிதாய் அர்ச்சனை செய்யப்பட்டிருப்பதையும் பார்த்து ஆச்சரியமடைந்து பின்வருமாறு யோஜித்தார்: "நேற்றையதினம் ராத்திரி சுவாமி சாத்தப்பட்டிருந்த நிர்மால்லியங்களெல்லாம் எடுத்தும் கதவுகளை பத்திரமாய்ப் பூட்டியும் நான் வீட்டிற்கு சென்றேனே! அப்படியிருக்க கதவுகள் திறந்திருப்பதும் சுவாமியினிடம் புஷ்பங்கள் புதிதாய் சொரிந்திருப்பதும் யாது விசேஷமோ தெரியவில்லையேயென்று திகைத்து வாடினான். அப்பொழுது அசரீரியாய் "திருவிசநல்லூர் அய்யாவாளிடஞ்சென்று நிச்சயந்தெரிந்துகொள்" என்ற வாக்குக்கேட்டது. அந்தக் குருக்கள் பரபரப்புடன் திருவிசநல்லூர் அய்யாவாளிடஞ் சென்று விஷயங்களை விரிவாய்ச் சொல்லி உண்மை தெரிவிக்கவேண்டியவுடன் அய்யாவாளுக்கு ஈசுவரனே தனக்கு ஓடம் தள்ளியும் அர்ச்சகராகவிருந்து சுவாமி தர்சனஞ் செய்வித்தாரென்ற வுண்மையைத் தெரிந்துகொண்டு பரவசரராய் ஈசுவரனை தியானித்தும் மெய்மறந்திருப்பாராயினர். அர்ச்சகருக்கு சற்று நேரங்கழித்து நடந்த விஷயத்தை யெடுத்துரைத்தார்.

தவிரவும் திருவிடமருதூரில் மழை வெகு நாள்வரையில் பெய்யாமல் ஊர் முழுமையும் ரொம்பக் காச்சலாய் ஆறுகள், குளங்கள், குட்டைகள், கிணறுகள், யாவும் ஜலம் வறண்டு ஜனங்கள் அவதிப்படுங்காலத்தில் சகல ஜனங்களும் இவரிடம் வந்து மழை பெய்யும்படி செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவர் உடனே அவ்வூருக்குச் சற்று வடக்கிலுள்ள கற்கடேசுவரசுவாமி கோவிலிற்சென்று ஈசுவரனை ஸ்தோத்திரம் செய்து "குளிராஷ்டக" மென்ற எட்டுசுலோகத்தைச் சொன்னவுடனே இடியும் மின்னலும் பயங்கரமாய் ஆரம்பித்து ஏராளமான மழை பெய்து ஊர் முழுமையும் ஜலசமுத்திரமாய்ச்செய்து ஜனங்களுடைய தாபத்தைத் தீர்த்துவிட்டது.

அவர்கள் செய்த அற்புதமான வேலைகளையும் பக்தியின் விசேஷத்தையும் அதனால் ஈசுவரனை ஓடக்காரனாகவும்அர்ச்சகராகவும் ஆனதையும் சகல ஜனங்களிடத்திலுமுள்ள ஸமரச பாவத்தையும் பார்த்தீர்களா. கங்கை வந்ததும் இறந்த குழந்தை பிழைத்ததும் ஈசுவரன் கைங்கரியஞ் செய்ததும் வருணபகவான் நடுங்கி மழை சரமாரியாய்ப் பொழியும்படி செய்ததும் பக்தர்களல்லாத மற்றவர்களுக்கு சாத்தியமா என்பதைக் கவனித்து நடவுங்கள்.

வேதத்தில் நம்பிக்கை யில்லாமலும், பெரியோர்களிடத்தில பக்தியில்லாமலும் நிரீசுவர வாதிகளாயுமிருக்கப்பட்ட இக்காலத்தில் பிரவகித்து வந்த மாயாவாதமென்னும் பெரிய நதியின் வெள்ளத்தை தியாஸபி என்றும் பிரம்மஞ்ஞானமென்றும் குப்த வித்தை யென்றும் சொல்லப்பட்ட பெரிய அணையால் மஹான்கள் தடுத்திராதிருந்தால் நமது இந்தியாவின் கதி என்ன? அவர்கள் நம்முடைய மதத்தின்மேன்மையை யெடுத்துரைக்காதிருந்தால் நமது சாஸ்திரவாராய்ச்சிகளும் அனுஷ்டானங்களும் பகவத்கீதை காலட்சேபங்களும் பறந்து போயிருக்குமல்லவா?

(ப—ர்.

ஆர்யர்கள் தர்மம்.

(154-பக்கத்தின் தொடர்ச்சி.)

புண்டரம்.

புண்டரமென்பது நாம் வழிபடும் கடவுளிடம் நமக்குள்ள பெரும் பற்றைக் குறிக்கும் ஓர் குறி. இது வெகு காலமாய் நம் தேசத்திலுள்ளது. அப்புண்டரம் முகத்திற் கலங்காரமாதலால் அதில்லாதது பெரியோர் வெறுக்கத்தக்கது. முக்கியமாய் ஊர்த்துவ புண்டரமென்றும், திரிபுண்டரமென்று மிருவகைப் படும். ஊர்த்துவ புண்டரம் அரியை வழி படுவோர்க்கும், திரி புண்டரம் அரனை வழிபடுவோர்க்கும் உரியது. இவ்விரண்டி னுள் ஒன்று அவசியம் தரிக்க வேண்டியதே. எக்ஞோபவீதம் சிகை, ஊர்த்துவ புண்டரம் பவித்திரம் இவை இல்லாதவன் செய்யுங்கர்மங்களெல்லாம் பயனற்றவை யெனவும்'' அசுசியுள்ளவனுனும் ஊர்த்துவ புண்டரத்தைத் தரித்தால் சுசியாவாரென்றும் விஷ்ணுஸ்மிருதியில் சொல்லியிருக்கிறது. இதனுல் அசுசியோடு இருக்கவேண்டு மென்பதைக்குறிப்பிடவில்லே. ஊர்த்துவ புண்டரத்திற்குள்ள விசேஷத்தை மாத்திரம் எடுத்துரைத்த தாகக் கொள்ளத்தக்கது.

மற்ருேர் ஸ்மிருதியில் "நீர்" திருநீறு திருமண் சந்தனம் இவைகளால் ஊர்த்துவ புண்டரத்தைத் தரிக்க வேண்டுமென்றும் ஜபகாலத்தில் திருமண்ணும் சந்தியாகாலத்தில் தண்ணீரும் ஓம காலத்தில் திரு நீறும் சந்தனம் எக்காலத்தும் தரிக்கத்தக்கன வென்றும் தெரிய வருகிறது. வெண்ணிறமுள்ள மண்ணுல் ஊர்த்துவ புண்டரம் தரித்துக் கொல்லல் மோக்ஷத்தைக்குறித்த தென்றும் மஞ்சள் நிறமுள்ளது ஐசுவரியத்தையும் செந்நிறமுள்ளது வசிகரத்தையும் கொடுக்கும் எனத் தெரிய வருகிறது. அரியுடைய திருவடிகள் போல் நடுவில் வெளியுடன் ஆன்மா நற் கெதி பெறற்பொருட்டு ஊர்த்துவ புண்டரந் தரித்தல் வேண்டும் என்று அதர்வண சுருதியிலிருப்பதாலும் தண்டம் போல் இடை வெளியுடன் பகவந்நாமத்தை உச்சார

ணம் செய்து கொண்டு ஊர்த்துவ புண்டரந் தரிக்க வேண்டு மென்று வஸிஷ்டர் கூறுவதாகவுந் தெரிய வருகிறது. வாசுதேவோப நிடத்தில் கோபி சந்தனத்தால் ஊர்த்துவ புண்டரந் தரிக்க வேண்டு மென்பதும் அதை ரொம்ப வணங்கி எடுத்து தண்ணீரைக் கொண்டு சகல வைதீக பிராமணர்களும் தரிக்க வேண்டு மென்றும் விரிவாய்க் கூறியிருப்பதாய்த் தெரிய வருகிறது. ஆகையால் முக்கியமாய் கோபிசந்தனமானது வைதீகர்களால் தரிக்கத்தக்கதென்றும் வேதத்தைப் பிரமாணமாய் உடைத்தாயிருக்கிற தென்றும் தெரிய வருகிறது.

அக்கினி ஹோத்திரத்தினிடத்து எடுத்த வெண்ணிற விபூதியை "தாம் செய்யும் கர்மம் பலப்படும் பொருட்டு" சிரஸில் "ஈசான மந்திரத்தால் தரிக்க வேண்டு மென்று பெரியோர்களுடைய அபிப்பிராயம். இது முதல் முவ்வர்ணத்தாருக்கும் ஏற்பட்டதே. இதனல் முக்கியமாய்த் தெரிந்துக் கொள்ள வேண்டுவது யாதெனின் அவரவர்கள் குலா சாரப்படி அவரவர்கள் புண்டரந் தரித்துக் கொள்ள வேண்டுமென்பதே. சிவ பக்தன் விபூதியைத் தரித்துக் கொள்ளலும் விஷ்ணு பக்தன் நாமம் அல்லது கோபி சந்தனம் தரித்துக் கொளளலும் அவசியமெனத்தெரிய வருகிறது. ரொம்ப வைதீக பிராமணர்களுக்கு கோபி சந்தனமும் அக்கினிஹோத்திர விபூதியும் சிரேஷ்டம். விபூதியின் முப்பட்டையாக குழைத்துப் பூசுவதின் கருத்து சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் முதலிய மூன்று கிருத்தியங்களையும் உடைய பரம சிவனை சூசிப்பிக்கிறது. கோபி சந்தனத்தின் இரண்டு ஊர்த்துவ பாதங்களும் மஹா விஷ்ணுவின் பாதத்தை சூசிப்பிக்கிறது. நடுவில் தரித்துக் கொளளும் சிகப்புக் கோடு மஹா லட்சுமியை சூசிப்பிக்கிறது. ஆகவே லட்சுமி ஸமேதரான மஹா விஷ்ணுவையே ஊர்த்துவ புண்டரம் சூசிப்பிக்கிறது. இனி ஸந்தியா வந்தனத்தை பிரஸ்தாபிக்கப்படும்.

(ப—ர்.)

பிரச்னோத்தரங்கள்.

I. (பி). போஜனம் செய்யும்போது மௌநமாய் இருக்க வேண்டுவது அவசியமா?

(உ). மௌனமய்யாயிருப்பது வெகு நன்மைதான். ஆனால் மௌநமாயிருப்பதின் தாற்பர்ய மென்னவென்றால் மனதை யேகாக்கிரபடுத்திதான் சாப்பிடும் அன்னமானது தன் தேகத்தில் சரிவர பசனமாகி ஈசுவரனையடைவதற்கனுகுணமான சரீரமாய் நிலைபெற்றிருக்கவேண்டுமென்று தீவிரமாய் சிந்தித்துக்கொள்ள வேண்டுமென்பதே. தவிரவும் பஞ்சபிராணன்களை யுத்தேசித்து அன்னம் உட்கொள்ளுவதின் தாற்பர்ய மென்னவென்றால் ஒவ்வொரு வாயுவும் அததன் விர்த்திகளை சரீரத்தில் சரிவரச் செய்யவேண்டுவதை யுத்தேசித்துத்தான் ஒவ்வொரு பிடி அன்னம் உட்கொள்ளும்பொழுதும் பகவந்நாமத்தை யுச்சாரணம் பண்ணிக்கொண்டு புசிப்பது நலம்.

II. (பி). போஜனம் செய்வதற்கு முந்தி என்ன செய்ய வேண்டும்?

(உ). அவரவர்களுக்கு ஏற்பட்ட ஈசுவராராதன ரூபமான கிரியைகள், யஞ்ஞங்கள் நித்திய கர்மங்கள் முதலியவைகளைச்செய்துவிட்டு பிறகு போஜனஞ் செய்யவேண்டும். அதிதிகளிருந்தால் அவர்களையுஞ் சேர்த்துக்கொள்ளவேண்டும், (இது யஞ்ஞத்தில் சேர்ந்து விட்டது.) அன்னம் வைத்தவுடன் ரொம்ப மரியாதையாய் அதை பிரம்மமாக பாவித்து உபசாரஞ் செய்து உதாஸீனமன்றியில் சாப்பிடவேண்டும். வெகு சந்தோஷத்துடன் அன்னத்தை அங்கீகாரஞ்செய்து சாந்தத்துடன் தனக்கு எப்பொழுதும் ஒருவிதமானகுறைவின்றி அன்னங்கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள்ளல்வேண்டும். அப்படி வெகு மரியாதையுடனும் பிரியத்துடனும் அன்னம் உட்கொள்ள

ப்பட்டால் அது தேகத்திற்கு ரொம்ப பலத்தையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கின்றது. இல்லாவிடின் தேகத்திற்கு அசௌக்கியத்தைத் தான் உண்டுபண்ணும்.

III. (பி) ஞானத்தையடைய இச்சிப்பவனுக்கு அத்தியவசிமாய் விலக்கவேண்டுவது என்ன?

(உ) உலகத்தில் எதெது கெட்டவைகளென் ஜனங்களால் ரொம்ப இகழப்படுகிறதோ தனக்கு க்ஷேமத்தைக் கொடுக்காததோ அவைகள் எல்லாம் விலக்கவேண்டியவைகளே. முக்கியமாய் பரஸ்திரீயை யிச்சித்தல் வெகு கொடிய நோயாதலால் அதை அவசியம் விலக்கவேண்டும். பரிசுத்தமாயிருப்பவர்களுக்குத்தான் ஞானத்திற்கதிகாரமுண்டு. ஈசுவரனும் அவர்களிடம் பிரசன்னமாகப் பிரியப்படுவார். ஆகையால் சரீரத்தையும் இச்சைகள் எண்ணங்கள் முதலியவைகளையும் வெகு நேர்மையாய் வைத்துக்கொள்ளவேண்டும். தவிரவும் ஸந்தானத்தையுண்டுபண்ண வேண்டுவது நமது கடமை யென்றும் சாஸ்திரோக்தமென்று மெண்ணிச்செய்யவேண்டுமே தவிர கேவலம் காமாவஸ்தையை நிவர்த்தித்துக்கொள்வதற்காகபுணர்தலை வைத்துக்கொள்ளக்கூடாது. தவிரவும் அவ்வாசையை ஒரேயடியாய் நிவர்த்திப்பது அசக்கியமானாலும் நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைத்து ரொம்ப மிதமாயிருக்கப்பழக்கிக்கொள்ள வேண்டும். பௌரணமி, அமாவாஸை, அஷ்டமி, சதுர்த்தசி, ஏகாதசி, முதலிய தினங்களில் முக்கியமாய் ஸ்திரீ சங்கமத்தை நிறுத்தல் வேண்டும். (வேண்டிய விபரங்களுக்கு மனுதர்மசாஸ்திரம் III 45 to 49 சுலோகங்களைப் பார்க்க.

IV. (பி) படுக்கைக்குச் செல்லுமுன் நாம் என்ன செய்யவேண்டும்.

(உ) படுக்கைக்குச்செல்வதற்கு முன் அரை மணி நேரமாவது (1) நாம் ஒவ்வொருதினத்திலும் செய்த வேலைகளை

ஆராய்ந்து கெடுதல் செய்கைகளாயிருந்தால் இனி அவ்விதம் மறுநாள் செய்யமாட்டோமென்று ஸங்கல்பித்துக்கொண்டும் ஈசுவரனைக் குறித்து கடைசியில் தியானித்து படுக்கைக்குச் செல்லவேண்டும். தவிரவும் நாம் நித்திரை செய்யப்போகுங்காலத்தில் உலக விஷயங்களை மறந்தும் தன்னருகில் நித்திராகாலத்தில் துர்தேவதைகள் வந்து பீடிக்காதபடி பலமாய் ஸங்கல்பம் செய்து தன்னைச் சுற்றிலுமொரு கவசத்தை யேர்படுத்திக்கொள்ள வேண்டும். பரிசுத்தமான வஸ்துக்களையும் ஈசுவரனையுமே சிந்தித்துப் பிறகு நித்திரை செய்யவேண்டும். ஈரக்காலுடன் நித்திரை செய்யக்கூடாது. வெகு நேரம் தூங்கக்கூடாது. விழித்துக்கொண்டவுடன் படுக்கையை விட்டு எழுந்து விடவேண்டும்.

(2) எந்த விஷயத்தைக்குறித்தாவது பெரிய ஸந்தேகங்கள் ஏற்பட்டுவிட்டால் அந்த விஷயத்தை மனதில் சிந்தித்து நித்திரை செய்துகொள்ள வேண்டும். அப்பொழுது ஜீவன் ஸ்தூல சரீரத்தை விட்டுவிலகினவுடன் நமது ஸந்தேகத்தை நிவர்த்தி செய்து நமது மூளையில் பதிவு செய்வான். சமீபத்தில் பென்சிலும் கடிதமும் வைத்துக்கொண்டிருந்தோமேயானால் விழித்துக்கொண்டவுடனே நாம் அதைக்குறித்துக்கொள்ளலாம். அவ்விதமாய் நாம் தெரிந்துகொள்வதற்கு சரீர சுத்தம் அத்தியாவசியமாகும்.

(ப—ர்.)

உ

சிவமயம்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப்புலவரும்,

சுத்தாத்துவித சித்தாந்த சைவப்பிரசாரகரும்,

உதயபானு பத்திராதிபருமாகிய,

சு. சரவணமுத்துப்பிள்ளை யவர்கள் சொல்லிய

என்சீர்கழி நெடிலடி—ஆசிரியவிருத்தம்.

திருவாரந் தனனெனும்பேர்க் இலக்ய மாகித்
திருவாரூர் வந்தமரு மிராமை யச்சீ
ருருவாரும் விப்பிரனய்ந் துயர்வே தத்தி
னுட்பொருளை யெவருமெளி துணர்ந்தே தேறிக்
கருவாரும் பிறப்பகலப் பிரம ஞானங்
காட்டுமொரு பத்திரிகை மாதந் தோறும்
பெருவாரங் கொண்டுபிர கடனஞ் செய்து
பேர்படைத்தா னிவன்கீர்த்தி பேசற் பாற்றே.

உத்தமமோனைக் கட்டளைக் கலித்துறை.

ஓங்கு முயர்கலை யோர்ந்துணர் வார்க்கு முதுபொருள்க
ளாங்கு வருமென வாங்கில மாங்கலை யாய்ந்துநிலை
தாங்கு மறிவு தளர்வார்க்கு மேனைத் தகவிலார்க்குந்
தேங்கு முறுதி செயும்பிரம ஞானந் தெரிந்திடினே.

சமாசாரக்குறிப்பு.

பிர்ம்மஞ்ஞான சங்கம் அஸிஸ்டெண்டு புரோவின்ஷியல் சிகிரிடெரி மகா-ா-ா-ஸ்ரீ T. S. லெட்சுமி நாராயணய்யரவர்கள் ஜூலைமீ 30உ முதல் ஆகஸ்டுமீ 15உ வரையில் எனங்குடி, எடமணல், நாகபட்டணம், சிக்கல், உக்கடை முதலிய விடங்களில் சென்று கர்மயோகம், பக்தியோகம், அப்பியாச யோகம், சாதனசதுஷ்டயம், தியாஸபி ஸம்மந்தவிஷயமாய் அநேக உபந்நியாஸங்கள் செய்துவந்தார்கள். நாகபட்டணத்தில் வெகுநாளாய் நித்திரையி லிருந்துகொண்டு வந்த சங்கமானது தட்டி யெழுப்பப்பட்டது. ஸப்-ஜட்ஜி மகா-ா-ா-ஸ்ரீ தேசிகாசாரியாரவர்கள் பிரஸிடெண்டாகவும்,

மகா-௱-௱-ஸ்ரீ சுந்தரம்செட்டியாரவர்கள் (டி. முன்சீப்) வைஸ்பிரஸிடெண்டாகவும் வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ சாம்பசிவய்யர் அவர்கள் ஸிகிரிடெரியாகவும் வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ N. P. சீனிவாசய்யர் அவர்கள் உதவி காரியதரிசியாகவும் பொறுக்கி யெடுக்கப்பட்டார்கள். சிக்கலில் ஞானசம்மந்த லாட்ஜ் என்ற நாமத்துடன் ஒரு பிர்ம்மஞ்ஞான சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாருடைய 60-வது வயதின் பூர்த்தியை உத்தேசித்து எனங்குடி பிர்ம்மஞ்ஞான சங்கத்தில் அக்டோபர் ௴ 1உயில் கோயில்களில் அபிஷேகம் அர்ச்சனை முதலியது செய்யப்பட்டன ஏழைகளுக்கு அன்னமும் வஸ்திரமும் பூரி தட்சணையும் அளிக்கப்பட்டது. அம்மாளுடைய சரித்திரம் சங்கிரகமாய் மகா-௱-௱-ஸ்ரீ ராமச்சந்திர நாயக்கரவர்களால் எடுத்துரைக்கப்பட்டதுடன் பகவத்கீதை காலட்சேபம் செய்யப்பட்டது. பிறகு கற்கண்டு தாம்பூலம் முதலியன வழங்கப்பட்டன.

ஹிந்துமடாலயங்கள் ஆதியில் ஆரியதரும பரிபாலன உத்தேசமாக ஏற்பட்டன பிறகு மடாதிபதிகள் மேற்படி தருமத்தை பாதுகாக்கும் விஷயமாயாவது ஜனங்களுககு அதுசம்மந்தமாய்ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திசெய்யவாவது எத்தனப்படாமல் தங்கள் பெருமையையும் ஆரவாரங்களையும் ஆடம்பரங்களையுமே பெரும்பான்மையாய் பாராட்டிக்கொண்டு தங்களுக்கு உண்மையில் ஏற்பட்டிருக்கும் பொறுப்பை முற்றிலும் மறந்தவர்களானார்கள். அதனால் புண்ணிய பூமியாகிய நமது இந்தியா அதற்குச்சொந்தமாகிய மதாபிமானத்தை விடத்தொடங்கிற்று. தெய்வாதீனமாய் நமது ஒத்தாசைக்கு வந்தவிவேகாநந்தர் மாதுஸ்ரீஅன்னிபெஸண்ட் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் முதலியவர்களின் முயற்சியால் ஜனங்களுக்கு நம்முடைய ஸநாதனமதத்தில் மீண்டும் அன்பும்பற்றுதலும் மேலிட்டு நமதுமதக்கொள்கைகளை யனுஷ்டிக்க எத்தனப்பட்டு வருகிறார்கள். தவிர நமது மடாதிபதிகளும் தங்கள் கடமையை இப்பொழுது நன்றாய் உணருகிறார்களென்றே எண்ணுவதற்கு காரணம் ஏற்படுகிறது. மைசூர் சமஸ்தானத்தைக்சேர்ந்த ஸ்ரீசிங்கேரிமடாதிபதியான ஸ்ரீ மத் சங்கராசாரியாரவர்கள் பங்களூரில் ஒரு சமஸ்கிருத கலாசாலை ஸ்தாபிக்க எத்தனப்பட்டுவருவதாயும் லட்சரூபாய்வரையில் மடத்திலிருந்து கொடுப்பதாய் உத்தேசித்திருப்பதாயும் மைசூர் திவான் அதற்கு அனுகூலமாயிருப்பதாயும் தெரியவருகிறது. இது ஒரு நல்ல அறிகுறி. ஸ்ரீகலியாணநந்த பாரதிசுவாமிகள் செப்டம்பர் ௴ 18உயில் அமலாப்பூர் என்கிற விடத்தில் இந்துப்பெண்களின் கல்வியைப்பற்றி ஒரு உபந்நியாஸம் செய்து வந்ததில் 5 வயது முதல் 11-வயதுக்குள்பட்டு பெண்களுக்கு கல்விகற்றுக்கொடுத்துவிடவேண்டுமென்றும் அப்படிச் செய்தால் அது கட்டாயம் அவர்கள் ஒழுக்கத்தைத் மேன்மைபடுத்துமென்றும் சொன்னார்களாம். காலத்திற்குத் தக்கபடியவர்கள செய்த உபந்நியாஸம் வியக்கத்தக்கதே.

பிர்மஞ்ஞான சங்கத்திற்கு மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாளே பிரஸிடெண்டாக உலகத்திலுள்ள கிளைச்சங்களிலுள்ள மெம்பர்களாக பொறுக்கியெடுத்தார்களென்ற விபரத்தை முன்னமேயே தெரிவித்தோ மல்லவா? பிறகு அந்த அம்மாள் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய விடங்க ளிலிருந்து திரும்பி இந்தியாவுக்கு வருகிற வைரயில் ஹைகோர்ட்டு ஜட்ஜி மகா-ா-ா-ஸ்ரீ கனம் சுப்பிரமணியய்யர் அவர்களே டிப்டிபிரஸிடெண்டாக நியமனம் செய்திருக்கிறார்கள். அவர்கள் இவ்விடத்தில் நடக்கவேண்டிய வேலையை கவனித்து வருவார்கள்.

திருவாரூர் எட்வர்ட்ஹாலில் 1907-ஸு ஆகஸ்டு மீ 17உ மாலை 7 மணி முதல் 8 மணி வரையில் ஹிந்துமதத்தைப்பற்றி தஞ்சாவூர் Mr N. K. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் உபந்நியாஸம் செய்தார்கள்.

பெஸண்டம்மாள் லந்தன், எடின்பிரோ, பாரிஸ், அமெரிக்கா, கொளு ம்பு அநேகவிடங்களில் மதஸம்மந்தமான அநேகஉபந்நியாஸங்கள் செய்துவி ட்டு தூத்துக்குடிமார்க்கமாய் இந்தியாவிற்குநவம்பர்மீ 3 உ சென்றார்கள்

தஞ்சாவூர் ரயில்டேஷனில் மாது ஸ்ரீ அம்மாளே உத்தேசத்து சில உபசாரமொழிகள் அடங்கிய பேப்பரை மகா-ா-ஸ்ரீ சதாசிவராவ் அவர்கள் வாசித்தார்கள். Mr. சீனிவாஸம்பிள்ளையவர்களால் ஹாரம் அம்மாளுக்கும் மற்றுமிருவர்களுக்கும் போடப்பட்டதுடன் ஒரு வெள்ளி பூத்தாம்பாளமும் வெகு மதியாகக்கொடுக்கப்பட்டது அம்மாள்தன்னால் இயன்ற வரையில் உழைப்பதாக வாக்களித்து நன்றிமொழிகளாக கூறினார்கள்

இந்த வருடம் டிஸம்பர் மீ 28 உ முதல் 31 உ வரையில் காசியில் பிர் ம்மஞ்ஞானசங்கத்தார்கள் கூடப்போகிறார்கள் விபரங்கள் பிந்திவரும்.

பிர்ம்மஸ்ரீ கணபதிசாஸ்திரியவர்கள் மாயவரத்தில் அத்வைத மதசம்மந் தமாயும் ஹைஸ்கூலில் பக்தியைப்பற்றியும் உபந்நியாசம் செய்தார்கள்.

ஏஜண்டுகள் தேவை!

நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும் பணம் வசூலிக்கவும் ஏஜண்டுகள் தேவை! தக்க கமிஷன் கொடுக்கப் படும். தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை, முதலிய விடங்களில் ஏஜ ண்டுகளாகயிருக்க விரும்புவோர்கள் விபரங்களுக்கு உடனே நேரில் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

பிர்ம்மஞ்ஞானப்பத்திரிகை.

1. 1906-ஹு ஜூலைமீ முதல் திருவாரூரில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இதில் ஹிந்துமததத்துவங்கள், பகவத்கீதைக்கு நூதனதமிழ் மொழிபெயர்ப்புகள், மஹான்களின் சரித்திரங்கள், அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், தியாஸபி, விவேகாநந்தரின் உபந்யாசங்கள், முதலிய விஷயங்கள் அடங்கியிருக்கும். தவிர, மடங்கள், ஆலயங்கள், தரும சத்திரங்கள், பரிபாலனம் செய்யப்பட்டு வரும் நேர்மை, சீர்குலைவு முதலியவைகளைப் பற்றிய ஸமாச்சாரக் குறிப்புகளும் பின்னும் மதசம்பந்தமான சமாச்சாரங்களும் அடங்கியிருக்கும்.

2. சாமான்ய ஏழைகள்கூட சுலபமாய் வாங்கி வாசித்துப் பயனெய்துமாறு இந்தியாவிற்கு வெகு சொற்பமாகிய வருடச் சந்தா ரூ 1—8-ம் சிங்கப்பூர், மோல்மீன், பினங்கு முதலிய இடங்களுக்கு ரூ 2—8 மாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஹெட்மாஸ்டர் மூலமாய் விண்ணப்பம் செய்துகொள்ளும் மாணாக்கர்களுக்கு மாத்திரம் ரூ 1 க்குக் கொடுக்கப்படும். சந்தா அட்வான்ஸாகவே செலுத்தப்படவேண்டும். அப்படி செலுத்துபவர்களுக்கு வருடத்திற்கு ஒரு படம் இனாமாயளிக்கப்படும். வருடக் கடைசியில் செலுத்தப் பிரியமுள்ளவர்களுக்கு வருட சந்தா ரூ 2 வீதம் சார்ஜ் செய்யப்படும். சந்தாதார்களாயிருக்க விரும்புவோர்கள் வருஷத் துவக்கமாகிய ஜூலையிலிருந்தாவது அல்லது ஜனவரியிலிருந்தாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். வேறுவிதமாய்ப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

தனிக்காப்பி கிரயம் அணா 4.

உபந்யாசங்கள் முதலிவைகள் தெளிவாயும் சேர்த்தியாயும் பிரதி மீ 20வக்குள் கிடைத்தாலன்றி அடுத்த மீத்தில் பிரசுரஞ் செய்யப்படமாட்டாது. நெருக்கமாயுந் தெளிவாயுமிராத உபந்யாசங்கள் பிரசுரஞ் செய்யப்படமாட்டாது. வாபீசுசெய்யப்படவுமாட்டாது. இதில் கையெழுத்துப்போடப்பட்டிருக்கும் உபந்யாசம் முதலியவைகளுக்குப் பத்திராதிபர் ஜவாப்தாரியல்ல. பத்திரிகை கிடைக்காதவர்கள் ஒரு மாதத்திற்குள் தெரிவித்துக் கொண்டாலொழிய பத்திரிகை மறுபடியுமனுப்பப்படமாட்டாது. அவசியம் வேண்டியதாயிருந்து கைவசமுமிருந்தால் காப்பி 4 அணா வீதம் பெற்றுக்கொண்டு கொடுக்கப்படும். பதில் வேண்டியவர்கள் ரிப்ளை கார்டு அல்லது லேபிள் அனுப்பினால் பதில் அனுப்பப்படும்.

Advertisements for moderate charges.

பிரசுரங்கள் மிதமான சார்ஜுக்குப் போடப்படும்.

Apply to,

ஏ. இராமய்யர்,
எடிட்டர் & புரொப்ரைட்டர்,
பிரம்மஞ்ஞான பத்திரிகை, திருவாரூர்.